# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்
## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016
## புவியியல்

தரம் - 11 நேரம் :- 3.00 மணி

சுட்டெண் :............................................ புள்ளிகள்:

### பகுதி I

- ❋ **அறிவுறுத்தல்கள்**
- ❋ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❋ **சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.**

- 01 முதல் 10 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. புவியின் மேற்பரப்பளவு .......................... சதுர கிலோமீற்றர் ஆகும்
( 510 மில்லியன் / 610 மில்லியன் / 710 மில்லியன் )

02. ஒளித்தொகுப்புச் செயன்முறைக்குப் பயன்படும் பிரதான வாயு .......................... ஆகும்
( ஒட்சிசன் / காபனீரொட்சைட் / மெதேன் )

03. ஆபிரிக்காக் கண்டமேடையில் அமைந்த தீவாக .......................... விளங்குகின்றது.
(சீசெல்ஸ்/ மடகஸ்கார்/ இலட்சத்தீவுகள்)

04. .......................... ஒரு தீப்பாறையாகும்
( நிலக்கரி / காரீயம் / கருங்கல் )

05. இலங்கையின் உலர்வலயத்தில் .......................... மண் அதிகம் பரம்பியுள்ளது.
( செம்மஞ்சள் லற்றசோல்ஸ் / செம்மஞ்சள் பொட்சோல் / செங்கபில நிற மண் )

06 இலங்கையின் ஆட்புல கடல் எல்லை .......................... கடல்மைல் வரை பரந்துள்ளது.
( 12 / 24 / 200 )

07 .......................... சமுத்திரத்தில் மரியானா அகழி அமைந்துள்ளது.
( பசுபிக் / அத்திலாந்திக் / இந்து )

08. சீனாவின் இலத்திரனியல் உற்பத்திகளை இறக்குமதி செய்யும் பிரதான நாடுகளில் ஒன்றாக .......................... விளங்குகின்றது.
( இந்தியா / பாகிஸ்தான் / இலங்கை )

09. இலத்திரனியல் உபகரணங்கள் தயாரிக்கப் பயன்படும் கனிப்பொருள் .......................... ஆகும்.
( காரீயம் / பெல்ஸ்பார் / மைக்கா )

10. இலங்கையில் மசகு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை .......................... என்ற இடத்தில் அமைந்துள்ளது.
( பொல்காவல / மீட்டியாகொட / சபுகஸ்கந்த

- **11 தொடக்கம் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவை சரியாயின் 'ச' இனையும் பிழையாயின் 'பி' இனையும் சுற்றி வட்டமிடுக.**

11. இலங்கையின் முதலாவது குடிக்கணிப்பு 1871இல் நடைபெற்றது. ( ச / பி )

12. இலங்கையின் மின்னுற்பத்தியில் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக அதிகளவு நுகரப்படுகின்றது. ( ச / பி )

Education கல்வி

13. இலங்கையில் நிலக்கீழ்ச் சுரங்கப்பாதை ரம்பொடையில் அமைக்கப்பட்டுள்ளது ( ச / பி )

14. அபிவிருத்தியை அளவிடும் நவீன குறிகாட்டிகளுள் ஒன்றாக மனித வறுமைச் சுட்டெண் விளங்குகின்றது. ( ச / பி )

15. 2016 மே மாதத்தில் இலங்கையின் அரநாயக்க, கல்துமுல்ல பகுதிகளில் பாரிய மண்சரிவு ஏற்பட்டது. ( ச / பி )

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களுள் 'அ' நிரலுக்கேற்ப 'ஆ' நிரலைத் தொடர்புபடுத்தி சரியான விடைகளைக் குறித்து நிற்கும் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16. உலகின் தரைத்தோற்ற நிலவுருவங்கள் 'அ' நிரலிலும் அவை காணப்படும் கண்டங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவுசெய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. நுல்லபார் சமவெளி | A – வட அமெரிக்கா |
| 2. திபெத் மேட்டு நிலம் | B – அவுஸ்திரேலியா |
| 3. அப்பலாச்சியன் மலைத்தொடர் | C – தென்னமெரிக்கா |
| 4. பிரேசிலியா மேட்டுநிலம் | D – ஆசியா |

1. CBAD 2. CABD 3. BDAC 4. BDCA (…...)

17. இலங்கையின் பாரம்பரியக் கைத்தொழில் இடங்கள் 'அ' நிரலிலும் அங்கு செய்யப்படும் பாரம்பரியக் கைத்தொழில் உற்பத்திகள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. பிலிமத்தலாவ | A – சேலைக்கரை |
| 2. மொறட்டுவ | B – பிரம்பு வேலை |
| 3. ரட்டுவான | C – முகமூடி |
| 4. அம்பலாங்கொட | D – பித்தளை அலங்காரம் |
| 5. கொக்கல | E – தளபாடம் |

1. DEACB 2. CDBEA 3. BDAEC 4. DEBCA (….)

18. இலங்கையின் வன ஜீவராசிகளின் ஒதுக்குகள் 'அ' நிரலிலும், அவை அமைந்துள்ள இடங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. தேசியப் பூங்கா | A – ரிடிகல |
| 2. வன ஒதுக்கு | B – வில்பத்து |
| 3. இயற்கை ஒதுக்கு | C. - சிங்கராஜ |
| 4. கடும்பாதுகாப்பிற்குட்பட்ட இயற்கை ஒதுக்கு | D - திருகோணமடு |

1. BADC 2. BCDA 3. BDAC 4. BDCA

( ……)

19 இலங்கையின் கனிய மணல் வகைகள் 'அ' நிரலிலும், அவை காணப்படும் இடங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. இல்மனைற் | A – மீரிகம |
| 2. ரூட்டைல் | B – புல்மோட்டை |
| 3. செர்கன் | C – வல்லிபுரம் |
| 4. சிலிக்காமணல் | D – நிலாவெளி |

1. DBAC 2. BCDA 3. ABCD 4. CDAB

(…......)

20 இலங்கையின் நதிகளுள் சில 'அ' நிரலிலும், அவற்றில் அமைந்த குளங்கள்

‘ஆ’ நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.


| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. மல்வத்து ஓயா | A – குருளுவாவி |
| 2. கலா ஓயா | B – சேன நாயக்க சமுத்திரம் |
| 3. கல்லோயா | C – கலா வாவி |
| 4. யான் ஓயா | D. - நுவரவாவி |

1. DACB 2. DCAB 3. DBAC 4. DCBA ( ……)

- **முதல் 25 வரையான வினாக்களின் இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பூரணப்படுத்துக.**

21. இலங்கையில் …………………. மாவட்டத்தில் அபதைற் கனியம் பரந்துள்ளது.
22. தென்னமெரிக்காவில் …………………. பிரதேசத்தில் அயனமழைக்காடு பரம்பியுள்ளது.
23. புவியின் பௌதிக, பண்பாட்டம்சங்களைக் கணனியைப் பயன்படுத்தி அமைக்கும் புதிய நுட்ப முறை …………………. என அழைக்கப்படும்.
24. 2007ஆம் ஆண்டு உலக காலநிலை வேறுபாடுகள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைக்காக IPCC நிறுவனத்திற்கும் …………………. அவர்களிற்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது.
25. ஆறு கடலுடன் சேருமிடம் …………………. என அழைக்கப்படும்.


- **26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தினைப் பயன்படுத்துக.**




26. இலங்கையில் வெள்ளப்பெருக்கினால் அதிகளவு பாதிக்கப்படும் மாவட்டத்தினைக் குறிக்கும் எழுத்து …………………. ஆகும்
27. இலங்கையில் வரட்சியினால் பாதிக்கப்படும் மாவட்டத்தினைக் குறிக்கும் எழுத்து ………… ஆகும்.
28. இலங்யையில் மண்சரிவினால் பாதிக்கப்படும் மாவட்டத்தினைக் குறிக்கும் எழுத்து ……… ஆகும்.

❋ 29ஆம் 30ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள வரைபினைப் பயன்படுத்துக.

**உலகின் கப்பல் கட்டும் கைத்தொழில் நாடுகளின் பங்களிப்பு.**




29. கப்பல் கட்டும் கைத்தொழிலில் கூடிய வளர்ச்சிப் போக்கினைக் காட்டும் நாடு ………………….ஆகும்.

30. …………………. நாட்டில் கப்பல் கட்டும் கைத்தொழில் குறைவான உற்பத்தியைக் காட்டுகின்றது.

❋ **31 முதல் 40 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தினை உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31. இலங்கையின் புராதன வழிபாட்டிடங்களை அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் காணப்பட்ட பாறை வகை.
    1. பளிங்குப்பட்டைப் பாறை
    2. டொலமைற்
    3. காரீயம்
    4. வைரம் (……)

32. உலகின் பிரதான காரீய உற்பத்தி நாடு
    1. இந்தியா 2. பாகிஸ்தான்
    3. ஆப்கானிஸ்தான் 4. ஐக்கிய அமெரிக்கா (……)

33. தாய்ப்பாறையின் தன்மை முழுமையாகச் சிதைவடைந்த மண் படை
    1. A 2. B 3. C 4. D (…....)

34. இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம்
    1. சீனன் குடா 2. கட்டுநாயக்கா
    3. இரத்மலானை 4. மத்தள (…...)

35. பெரிய அவுஸ்திரேலியப் பாலைவனம் காணப்படும் காலநிலை வலயம்
1. குளிர் காலநிலை 3. மத்தியதரைக்கடற் காலநிலை
2. இடைவெப்பக் காலநிலை 4. அயனக் காலநிலை (…...)

36. ஐரோப்பாக் கண்டத்தில் வாழும் மக்களின் பிரதான உணவுப் பயிர்
1. சோளம் 2. நெல் 3. கோதுமை 4. இறுங்கு (…...)

❋ **37ஆம், 38ஆம் வினாக்களுக்கு விடையளிக்கப் பின்வரும் கூற்றுக்களைப் பயன்படுத்துக.**

A – கனியவள அகழ்வு
B – சூழல் மாசடைவு
C – மருத்துவசேவை வளர்ச்சி
D – சிசுமரணவீதம்

37. ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பு மற்றொரு காரணியிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தும் இரு கூற்றுக்கள்
1. A,C 2. A,B 3. A,D 4. C,D (…...)

38. ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பு மற்றொரு காரணியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் இரு கூற்றுக்கள்.
1. A,C 2. C, B 3. C, D 4. A, D (…...)

39. இலங்கையின் வெப்ப மின்சக்தி நிலையம், நீர் மின்சக்தி நிலையம், காற்று மின்சக்தி நிலையம் என்பன அமைந்துள்ள இடங்களை முறையே தரும் விடை
1. களனிதிஸ்ஸ, புத்தளம், கொத்மலை
2. சமனல, உக்வெல, கனியோன்
3. சுன்னாகம், ரன்தம்பே, கொத்மலை
4. கெரவலப்பிட்டிய, லக்சபானா, அம்பாந்தோட்ட (…...)
5.

40. இலங்கையில் முருகைக் கற்பாறைகள் காணப்படும் பிரபல்யமான இரு இடங்கள்
1. ஹிக்கடுவ, மணற்காடு 2. பாசிக்குடா, மோதரை
3. ஹிக்கடுவை, பாசிக்குடா 4. பாசிக்குடா, சிலாவத்துறை (…...)

(40 புள்ளிகள்)

## பகுதி - II

- ❈ **அறிவுறுத்தல்கள்**
- ❈ **வினாத்தாள் பகுதி – I, பகுதி II எனும் இரு பகுதிகளைக் கொண்டது.**
- ❈ **பகுதி I இன் வினா கட்டாயமானது**
- ❈ **பகுதி II இல் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**
- ❈ **இவ்வினாத்தாளுக்கு விடையளிக்கவேண்டிய மொத்த வினாக்களின் தொகை ஐந்து(05) ஆகும்.**

1. அ) தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1:50000 இடவிளக்கப்படத்தின் பகுதியினை நன்கு அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இல I முதல் V வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

I. தரப்பட்ட இடவிளக்கப்படத்தின் தென்கிழக்குப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பயிர்
( சேனை / தெங்கு / றப்பர் )

II. ⑤ என்ற இலக்கத்தினால் குறித்துக்காட்டப்படும் விடயம்
(நீர்ப்பிரிமேடு / அணைக்கட்டு / கால்வாய் )

III. A -B என்ற கோட்டினால் காட்டப்பட்டுள்ள சாய்வு
( மென்சாய்வு / குழிவுச் சாய்வு / குத்துச் சாய்வு )

IV. படத்தில் அதிகம் பரம்பியுள்ள மாவட்டம்
( அனுராதபுரம் / பொலன்னறுவை / கேகாலை)

V. படத்தின் வட எல்லையின் மத்திய பகுதியிலிருந்து மேற்கு எல்லையின் மத்திய பகுதி வரை செல்லும் வீதி
( பிரதான வீதி / சிறு வீதி / புகையிரதப்பாதை )

VI. B 294 பிரதான வீதியின் நீளத்தைக் கிலோமீற்றரில் தருக.

VII. படத்தில் காட்டப்பட்டுள்ள சதுரத்தினுள் வாழும் மக்கள் பின்பற்றும் மதம் யாது?


VIII. படத்தில் பரவலாகச் செய்கை பண்ணப்படும் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான பயிர் எது?

IX. படத்தில் E – F என்ற கோட்டினால் காட்டப்பட்டிருக்கும் தரைத்தோற்ற அம்சம் எது?

X. படத்தின் மத்திய பகுதியினூடாகச் செல்லும் நிர்வாக எல்லையினைப் பெயரிடுக.

( 10 புள்ளிகள் )


ஆ) தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தினை நன்கு அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக



1. படத்தில் காட்டப்பட்டுள்ள A, B, C ஆகிய நதிகளுள் ‘மறேடாலிங்’ நதியினைக் குறிக்கும் எழுத்து எது?
2. படத்தில் D, E, F ஆகிய எழுத்துக்களில் ‘அந்தீஸ்’ மலைத் தொடரினைக் குறிக்கும் எழுத்து எது?
3. படத்தில் G, H, J ஆகிய ஆற்றுச் சமவெளிகளுள் நெற்செய்கை நடைபெறும் ‘போ’ நதிச் சமவெளியினைக் குறிக்கும் எது?
4. படத்தில் K, L, M எழுத்துக்களினால் காட்டப்படும் சூறாவளிப் பிரதேசங்களுள் ‘தைபூன்’ சூறாவளி தாக்கும் பிரதேசத்தினைக் குறிக்கும் எழுத்து?
5. P, Q, R ஆகிய எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் மோட்டார் வாகன உற்பத்தி முன்னணி நாடுகளுள் ‘சீனாவை’ குறிக்கும் எழுத்து எது? ( 05 புள்ளிகள் )


இ) தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தினை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. படத்தில் A, B, C எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள இடங்களுள் தெய்வேந்திர முனையைக் குறிக்கும் எழுத்து எது?
2. படத்தில் D, E, F ஆகிய எழுத்துக்களினால் காட்டப்படும் தீவுகளுள் ‘நெடுந்தீவை’ குறிக்கும் எழுத்து எது?
3. படத்தில் G, H, J எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள மாவட்டங்களுள் இரத்தினக்கல் அகழ்வுக்குப் பிரசித்திபெற்ற இரத்தினபுரி மாவட்டத்திற்குரிய எழுத்து யாது?
4. படத்தில் K, L, M ஆகிய இடங்களுள் சிறுஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடத்தைக் குறிக்கும் எழுத்து எது?
5. படத்தில் P, Q, R ஆகிய நகரங்களில் புராதன உல்லாசப் பயண வலயத்தைச் சார்ந்த அனுராதபுர நகரைக் குறிக்கும் எழுத்து எது?




(05 புள்ளிகள் )


## பகுதி II




உலகின் பிரதான காலநிலை வலயங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

1. படத்தில் B, C எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயங்களைப் பெயரிடுக. ( 02 புள்ளிகள்)
2. (a) காலநிலையினைத் தீர்மானிக்கும் இரு காரணிகளைக் குறிப்பிடுக. ( 02 புள்ளிகள்)
   (b) அயனக் காலநிலையின் இரு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
3. (a) நீர் மாசடைதலை ஏற்படுத்தும் மானிட நடவடிக்கைகள் இரண்டு தருக ( 02 புள்ளிகள்)
   (b) நீர் மாசடைதலை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக. ( 02 புள்ளிகள்)

03.




மண்ணின் பக்கப்பார்வை வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள.

I. A,B,C படைகளைப் பெயரிடுக. ( 02 புள்ளிகள்)

II. மண்ணுருவாக்கக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03புள்ளிகள் )

III. மண் தரமிழப்பதற்கான இரண்டு காரணிகளை விளக்குக. (03புள்ளிகள்)

04. I. தென்னமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் பரம்பியுள்ள அயனமண்டல மழைக்காடுகள் அழைக்கப்படும் பெயர்களை முறையே தருக? (02 புள்ளிகள்)

II. அயன மண்டல மழைக்காடுகளின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள் )

III. காடுகளும் வன ஜீவராசிகளும் எதிர்நோக்கும் இரு பிரச்சினைகளை விளக்குக. (03 புள்ளிகள்)

06. I. இலங்கையில் பின்வரும் ஒவ்வொரு பயிர்ச்செய்கைக்குமுரிய ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களைக் குறிப்பிடுக.

A – தேயிலை
B – றப்பர்
C – தென்னை (03 புள்ளிகள் )

II. a) தேயிலைப் பயிர்ச்செய்கைக்குச் சாதகமான இரு பௌதிகக் காரணிகளைக் குறிப்பிடுக. ( 02 புள்ளிகள் )

b) இலங்கையின் நெற்செய்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள் )


III. இலங்கையில் நெற்செய்கை அபிவிருத்திக்காக அரசாங்கம் மேற்கொண்ட இரு நடவடிக்கைகளைத் தருக? (02 புள்ளிகள்)

07. I. இலங்கையில் சனத்தொகை கூடிய மாகாணத்தையும், குறைந்த மாகாணத்தையும் தருக. (02 புள்ளிகள்)

II. இலங்கையின் குடித்தொகையில் சமனற்ற பரம்பல் காணப்படுவதற்கான மூன்று காரணிகளைத் தருக? (03 புள்ளிகள்)

III. இலங்கையில் சனத்தொகையின் சமனற்ற பரம்பலினை இழிவளவாக்குவதற்குப் பின்பற்றப்படக்கூடிய இரு வழிமுறைகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

08. படத்தில் புவியின் உள்ளமைப்புக் காட்டப்பட்டுள்ளது.




I. படத்தில் B, E ஆகிய பகுதிகள் குறிக்கும் அம்சத்தினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. (a) X, Y என குறித்துக்காட்டப்பட்ட எல்லைகளைப் பெயரிடுக (02 புள்ளிகள்)

b) புவியோட்டின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

III. மனித செயற்பாடுகளினால் நிலக்கோளத்தில் ஏற்படும் இரு சூழற்பிரச்சினைகளை விளக்குக (03 புள்ளிகள்)

09. I. தயாரிப்புக் கைத்தொழில்கள் இரண்டினைப் பெயரிடுக. (02புள்ளிகள்)

II. கைத்தொழில்களின் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

III. உலகின் தயாரிப்புக் கைத்தொழில் சார்ந்த எவையேனும் இரு பிரச்சினைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page